## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 7.9.2014

திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் வட்டம், வெம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. புண்ணியகோட்டி என்பவரின் மகன் லட்சுமணன் 23.3.2014 அன்று சிறுமின்விசை மோட்டாரை இயக்கிய போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், குண்டலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மார்கண்ட மேஸ்திரி என்பவரின் மகன் சங்கரய்யா 4.5.2014 அன்று தாதிரெட்டிபல்லி கிராம ஏரி கரை அருகே அறுந்து கிடந்த மின்சார கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், வேலாமூர் மஜ்ரா ராமாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வேம்பன் என்பவரின் மகன் மாசிலாமணி 4.5.2014 அன்று வீட்டின் அருகே அறுந்து கிடந்த மின்சார கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், வலையங்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரி என்பவரின் மகன் முத்துமாரி 3.5.2014 அன்று சிவரக்கோட்டை கிராமம், அருள்மிகு சங்கையா திருக்கோவில் அருகே விளம்பர பலகை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கியத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்திையும்;

வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், வண்டிக்கல் கிராமத்தைச் சேர்ந்த திரு. மார்கபந்து என்பவரின் மகன் பலராமன் 6.5.2014 அன்று விவசாய நிலத்தில் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்தால் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், திருக்காட்டுப்பள்ளி சரகம், விஷ்ணம்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியன் என்பவரின் மகன்

சிவக்குமார் 6.5.2014 அன்று வீட்டினருகே இருந்த மின்சார கம்பத்தில் ஏறிய போது தவறி கீழே விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், எம்.செட்டிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜீ என்பவரின் மனைவி ரஞ்சிதம்மாள் 7.5.2014 அன்று வீட்டின் அருகே அறுந்து கிடந்த மின்சார கம்பியை மிதித்ததால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் வட்டம், நெற்குன்றம் பகுதியைச் சேர்ந்த திரு. கன்னியப்பன் என்பவரின் மகன் அண்ணாமலை 7.5.2014 அன்று எம்.ஆர். பள்ளி அருகே தாழ்வாக இருந்த மின்கம்பியிலிருந்து மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், சித்திரைச்சாவடி கிராமத்தைச் சேர்ந்த திரு. கருணாநிதி என்பவரின் மகன் பிரகாஷ் 8.5.2014 அன்று விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், திருவெண்ணெய்நல்லூர் கிராமத்தில் வீட்டின் அருகே அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்தால் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், வெள்ளிதிருமுத்தம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சிதம்பரம் என்பவரின் மகன் முருகேசன் 12.5.2014 அன்று மின்மோட்டாரை இயக்கிய போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**